**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண். 173/2016

நாள்: 05.03.2026

பெயர்: மோகன் த/பெ: பக்கிரிசாமி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி...</u>**

1. **வா.சா.ஆ.1** தான செட்டில்மென்ட் பத்திரத்தில் தாவா சொத்து தவிர சர்வே எண் 94/7 ல் 41 சென்ட் சர்வே எண் 118/4 ல் 94 சென்ட் சேர்த்து லோகாம்பாள் வாதிக்கு எழுதிக்கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் தெரியும். வா.சா.ஆ.1 ஏற்பட்ட விபரம் 30 வருடங்களுக்கு முன்பே தெரியும்என்றும் வழக்கிற்காக தெரியவில்லை என் பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் தற்போது தைல மரம் இப்போது பயிரிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து தற்போது வாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய அனுபவத்தில் தான் உள்ளது. சாட்சி தாமாக முன்வந்து தாவா சொத்தை சுற்றி வேலி அமைத்துள்ளதாக கூறுகிறார். தாவா சொத்தை சுற்றி எனக்கும் நிலங்கள் உள்ள காரணத்தினால் வாதியின் நிலத்தில் அத்துமீறி நுழைந்து மரங்களை வெட்ட முற்பட்டோம் என்றால் சரியல்ல.

2. தாவா சொத்தை பொறுத்து மோசடியாக என் பெயரில் பட்டா மாற்றிக்ககொண்டேன் என்றால் சரியல்ல. என் அப்பா பெயரில் உள்ள பட்டா தான் வாரிசு அடிப்படையில் என் பெயரில் மாறியது. வட்டாட்சியரிடம் வாதி பட்டா மாறுதல் சம்மந்தமாக புகார் அளித்து அதன்பேரில் விசாரணை நடந்தது என்றால் சரிதான். விசாரணை முடிந்து நீதிமன்றத்தை நாட சொல்லி பரிந்துரை செய்தார்கள் என்றால் சரியல்ல. வாதி எனக்கு எழுதிக் கொடுத்த பத்திரத்தை காண்பித்ததால் பட்டாவில் எவ்வித மாற்றமும் செய்யாமல் திருப்பி அனுப்பிவிட்டார்கள். எனக்கும் 1ஆம் பிரதிவாதிக்கும் எவ்வித முன்விரோதமும் இல்லை. தற்சமயம் வரை பேச்சு வார்த்தை உள்ளது. அவருக்கும் சேர்த்து தான்

வழக்கை நான் நடத்துகிறேன். என் பெயரில் பட்டா எதன் அடிப்படையில கொடுக்கப்பட்டது என்றால் வாரிசு அடிப்படையில் கொடுக்கப்பட்டது. எந்த ஆவணங்களின் அடிப்படையில் நான் பட்டா வாங்கினேன் என்றால் ஆவணங்கள் அடிப்படையில் வாங்கவில்லை VAO கொடுத்த சான்றிதழின் அடிப்படையில் வாங்கினேன். எந்த ஆவணங்களின் அடிப்படையில் நான் பட்டா வாங்கினேன் என்று நிரூபிப்பதற்கு நானே கடமை பட்டுள்ளேன் என்றால் சரிதான். பட்டாவை மட்டும் வைத்து கொண்டு நான் தாவா சொத்தில் உரிமைக் கோர முடியாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் வாய்மொழியாக எனது தகப்பனாருக்கு வாதி கொடுத்துள்ளார் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எங்கள் சொத்தை கொடுத்து அவர்கள் சொத்தை வாங்கினேன் என்று சாட்சி கூறுகிறேன். வாய் மொழியாக பரிவர்த்தனை செய்துள்ளதாக எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

3. வாய் மொழியாக கொடுக்கப்பட்டதற்கும் பரிவர்த்னை செய்ததற்கும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது எனது தகப்பனாரும் வாதியின் தகப்பனாரும் மாற்றிக் கொண்டது. எனது வழக்குரையில் எனக்கும் எனது குடும்பத்தாருக்கும் பாகம் பிரித்ததன் பேரில் தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கும் எனது அண்ணனுக்கும் பாக பிரிவினை ஏற்பட்டதால் எனக்கு பாத்தியப்பட்டது. எனது அப்பா பரிவர்த்னை செய்து கொண்டது எனக்கு நேரடியாக தெரியாது. எனது அப்பா எந்த வருடம் இறந்தார் என குறிப்பிட்டு ஞாபகமில்லை. 27 வருடங்கள் ஆகிவிட்டது. சர்வே எண் 94/10 சொத்தினை எனது தந்தை வாதிக்கு பரிவர்த்தனை செய்து கொடுத்ததாக எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வாய்மொழி பரிவர்த்தணை செய்து கொண்டதன் பேரில் 14.08.2003 ல் சர்வே எண் 94/10 சொத்தை ஏன் வாதி பேரில் கிரயம் கொடுத்தோம் என்றால் எங்கள் பேரில் பட்டா இருந்தது அதை மாற்றுவதற்காக வாதி கேட்டார் அதற்காக கிரயம் கொடுத்தோம். இந்த 14.08.2003 ஆம் வருடம்

கிரயம் கொடுக்கும் பொழுது எனது அப்பா உயிருடன் இருந்தார் என்றும் வாய் மொழி பரிவர்த்தனை மூலம் சொத்து மாற்றிக் கொண்டேன் என்று நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் வீடு 2002ல் எரிந்து விட்டது என்றால் வீடு எரிந்து விட்டது ஆனால் வருடம் ஞாபகத்தில் இல்லை. அப்போதெல்லாம் நாங்கள் ஒன்றாகத்தான் இருந்தோம். அப்போது வீடு எரிந்து சமயத்தில தாவா சொத்திற்கான பத்திரங்கள் அனைத்தும் எரிந்து விட்டதா என்றால் எனக்கு தெரியாது. 1961 ஆம் ஆண்டிற்கான 'ஆ' பதிவேடு லோகாம்பாள் பேரில உள்ளதா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 1985 ஆம் ஆண்டிற்கான ஆ பதிவேடு எனது அப்பா பெயரில் உள்ளதாக சாட்சி கூறுகிறார். 1976 ஆம் ஆண்டில் லோகாம்பாள் வாதி பெயருக்கு **வா.சா.ஆ.1** ஆன தான செட்டில்மென்ட் ஏற்படுத்திக்கொடுத்தார் என்றால எனக்கு தெரியாது. 1985 ஆம் ஆண்டிற்கான 'ஆ' பதிவேடு எனது அப்பா பெயரில் தவறுதலாக ஏற்பட்டதால் அதை வைத்து நான் கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. **பி.வா.சா.ஆ.1** ஆவணம் சட்டப்படி செல்லாது என்றும் அதை வாதி எழுதித்தர வில்லை என்றும் சொன்னால் சரியல்ல கிரயம் கொடுத்த அதே தேதியில் வாதி **பி.வா.சா.ஆ.1** ஆவணத்தை எழுதிக்கொடுத்தார் என சாட்சி கூறுகிறார். **பி.வா.சா.ஆ.2** பட்டாவை நாங்கள் மோசடியாக ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல. **பி.வா.சா.ஆ.4** கிரய பத்திரம் இந்த வழக்கிற்கு சம்மந்தமில்லாதது என்று சொன்னால சரியல்ல. **பி.வா.சா.ஆ.5** ஆன லோக்அதாலத்தில் கொடுத்த அவார்ட் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்றால சரியல்ல. **பி.வா.சா.ஆ.1** மற்றும் **பி.வா.சா.ஆ.4** யார் எழுதினார்கள் என்றால் எழுத்தர் ராதாகிருஷ்ணன் எழுதினார். **பி.வா.சா.ஆ.1** கையில் எழுதப்பட்டது என்றும் **பி.வா.சா.ஆ.4** தட்டச்சு செய்யப்பட்டது என்றால் பி.வா.சா.ஆ.1 ஐ எழுதியது ஏன் என்றால் வாதி கூறி எழுத்தர் தயார் செய்ததாக கூறுகிறார். எனது அப்பா பெயரில் ஆ பதிவேடு 1985 ஆம் வருடத்தில இருந்து வருகிறது என்றும் பட்டாவும் எங்கள் பெயரில் மாறியபின் எதற்காக விடுதலை பத்திரம் எழுதி வாங்கினோம் என்றால் எங்கள் பெயரில் ஆதரவு ஏற்படுவதற்காக எழுதி

வாங்கினோம். வாதியின் குடும்ப சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நானும முதலாம் பிரதிவாதியும் சேர்ந்து **பி.வா.சா.ஆ.5** ஆவணத்தை ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல. **பி.வா.சா.ஆ.5** ஆவணம் ஏற்பட்தற்கு பின்பு தான் வாதியின் குடும்பத்தில் பிரச்சனை ஏற்பட்டு பல்வேறு வழக்குகள் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

4. **பி.வா.சா.ஆ.5** ஏற்படுவதற்காக அந்த வழக்கில் எந்த ஆணவங்கள் தாக்கல் செய்தோம் என்றால் பட்டா மற்றும் கிரயபத்திரம் தாக்கல் செய்துள்ளதாக ஞாபகம் உள்ளது. அப்போது பட்டா என் பெயரில் இருந்ததா என்றால் கூட்டு பட்டாவாக இருந்தது. அந்த கூட்டுப்பட்டாவில் இருந்த நபர்களை அந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்தோமா என்றால் ஞாபகத்தில் இல்லை. என்னுடைய மற்றும் என் அண்ணனுடைய பெயரில் பட்டா இருந்ததா என்றால் எங்கள் இருவரின் பெயரிலும் பட்டா இருந்தது. **பி.வா.சா.ஆ.5** சம்மந்தப்பட்ட வழக்கிற்கது உண்டான பட்டாவிற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் அப்போது குறியீடு செய்யப்படவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. **பி.வா.சா.ஆ.5** ல் தாவா சொத்து உள்ளது என்றால் உள்ளது. சுமார் 80 சர்வே எண்கள் உள்ளது என்றால் ஞாபகம் இல்லை. எனது தகப்பனாருக்கு இரண்டு மனைவிகள். 1. ராமானுஜஅம்மாள் 2. அலமேலு அம்மாள். முதலாம் மனைவிக்கு பிறந்தவர் சாவித்திரி. 2ஆம் மனைவிக்கு நானும் எனது அண்ணன் எனது மூத்த சகோதரிகள் மணிமேகலை, ரேணுகா, இளைய சகோதரி செல்வராணி வாரிசுகள்ஆவார்கள். 06.09.1972 ல் எனது அப்பா முதலாம் மற்றும் இரண்டாம் மனைவிகளை கார்டியனாக நியமித்து எனக்கும் எனது அண்ணனுக்கும் ஒரு பாகப்பிரிவினை எழுதி வைத்துள்ளது தெரியுமா என்றால் தெரியும். அந்த பாக பிரிவினை பத்திரத்தில் தாவா சொத்து வரவில்லை என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. **அது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 1993 ஆம் வருடம் நானும் 1ஆம் பிரதிவாதியும் தனித்தனியாக வா.சா.ஆ.6ன் படி கிரயம் கொடுத்தோமா என்றால் எனக்கு ஞாபகத்தில் இல்லை. வாய்மொழி பரிவர்த்னை செய்து கொண்டதற்கு சர்வே எண் 94/10 உள்ளது என்றால்

சரிதான். எனவே தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. 1993 ஆம் வருடம் அருமைராஜ், அருள்ராஜ் என்பவருக்கு நான் ஒரு கிரய பத்திரம் எழுதிக்கொடுத்தேனா என்றால் ஞாபகம் இல்லை பின்பு வழக்கறிஞர் கொடுத்த ஆவணத்தை பார்த்து எழுதிக்கொடுத்தாக சாட்சி கூறுகிறார். அது **வா.சா.ஆ.7** ஆக குறிப்பிடப்படுகிறது. **வா.சா.ஆ.7** எனது அண்ணனும் அதே தேதியில் அருமைராஜ், அருள்ராஜீக்கு ஒரு கிரயம் கொடுத்தார் என்றால் சரிதான்.

ஒப்பம்/—மோகன்

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி,
என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து
காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு
கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/—S.தனலெட்சுமி
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஜெயங்கொண்டம்